Koviloor Digital Library

நரசிம்மர் வழிபாடு

மதுரை ஆனைமலை நரசிங்கம்
[யோக நரசிங்கர் கோவில் சிறப்புடன்]

11157
Q22

ஆடியாடி அகம் கரைந்து, இசைபாடிப்பாடிக் கண்ணீர் மல்கி,எங்கும்
நாடிநாடி நரசிங்கா வென்று வாடி வாடுமிவ் வாணுதலே – நம்மாழ்வார்

அவனருள் வெளியீடு -78 ஜனவரி – 2001
அறப் பிரசுரம் – இலவசம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

நரசிம்மர் வழிபாடும் தலங்களும்

மதுரை, ஆனைமலை, நரசிங்கம்
[யோக நரசிங்கர் கோவில் சிறப்புடன்]

11157

ஆடியாடி அகம் கரைந்து, இசைபாடிப்பாடிக் கண்ணீர் மல்கி, எங்கும்
நாடிநாடி நரசிங்கா வென்று வாடி வாடுமிவ் வாணுதலே - நம்மாழ்வார்

அவனருள் வெளியீடு -78 ஜனவரி – 2001

அறப் பிரசுரம் – இலவசம்

கோவிலூர் ஆண்

Koviloor Digital Library

பொருளடக்கம்

அவனருள் வெளியீடு – ஒரு அறிமுகம் 3

முன்னுரை 4

1. விஷ்ணு அவதார சன்னதிகள் – சில செய்திகள் 5
2. நரசிம்ம அவதார வரலாறு 6
3. நரசிம்ம அவதாரத் தத்துவம் 6
4. நரசிம்மர் வழிபாடு 9
5. தமிழகத்துள்ள நரசிங்கர் கோயில்கள் 11
6. முக்கிய நரசிம்மத் தலங்கள் 12
7. மதுரை, ஆனைமலை நரசிங்கப் பெருமாள் ஆலயம் 18
8. ஆதி சங்கரரும் நரசிம்மரும் 21
9. நரசிம்மர் உருவ பேதங்களும், முக்கியப் பெயர்களும் 21
10. நரசிம்மரைப் பற்றிய முக்கிய நூல்கள் 22
11. நரசிம்மர் முக்கியத் துதிகள் 23
12. கம்பப் பெருமாள்கள் 27
13. நவக்ரஹமும், நரசிம்மரும் 28
14. நரசிம்மர் தமிழ் அஷ்டோத்திரம் 29
15. யோக நரசிம்மரின் சிறப்பு 32
16. ஆனைமலை கிரிவல வழிபாடு 32

ஸ்ரீ ந்ருஸிம்ஹாநுஷ்டுப் மூலம்

உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோமுகம்।
ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம் ம்ருத்யும்ருத்யும் நமாம்யஹம்॥

Koviloor Digital Library

உ

அவனருள் வெளியீடு - ஒரு அறிமுகம்

மீனாட்சியின் மதுரையின் கிழக்கே, மாரியம்மன் தெப்பக்குள மேற்குக் கரையில் உள்ள, எனை ஆட்கொண்ட ஸ்ரீ மரகதவல்லி முக்தீசுவரர் அருளால் 22–6–88 புதனன்று காஞ்சி பரமாச்சாரியார், ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் அளித்த பணி ஆயுட்பணியாக வளர்ந்து விட்டது.

1008 சிவாலயங்களைப் பற்றித் துவங்கிய ஆய்வு, அகிலத்துள்ள சர்வ ஆலயங்களைப் பற்றியும், சர்வேஸ்வரரைப் பற்றியும் அறிவதையே வாழ்க்கையாக்கி விட்டது.

அவ்வாழ்வில், அறிய வாய்த்ததை, அருகில் உள்ளோரோடு மட்டுமன்றி, எட்ட இருப்போரோடும் பகிர்ந்து கொள்ளும் முயற்சிகளே அவனருள் வெளியீடுகள்.

ஆலய வரலாறுகள், திருத்தல வழிகாட்டிகள், கோயிற்களஞ்சியங்கள், திருப்பெயர்த் தொகுப்புகள், தமிழில் அர்ச்சனைத் துதிகள், வழிபாட்டு முறை விளக்கங்கள், தத்துவ விளக்கங்கள், கலாச்சாரக் கோட்பாடுகள், இறைவனைப் பற்றி தத்துவ அறிமுகங்கள் என்றுஇதுவரை, 75க்கும் மேற்பட்ட நூல்கள் அவானல் எழுதுவிக்கப்பட்டு வெளியாகியுள்ளன.

தொடர்ந்து, தன்னைப் பற்றியும், தன்னுள் ஒன்ற முயன்ற அடியவர்களைப் பற்றியும், அந்த அருளாளர்கள், தாம் பெற்ற பேற்றை, பாமரர்க்கும் புரியும் வகையில், எழுதி வைத்த நூல்கள் பற்றியும், அவனிடம் இட்டுச் செல்லும் இன்னும் பிறவற்றைப் பற்றியும், பல்லோரும், மென்மேலும் அறிந்திடச் செய்வது, நம்மை ஈர்த்து, ஆட்கொண்டு, இமைப்பொழுதும் நீங்காத அவன் பொறுப்பு.

- அவனருள்

Koviloor Digital Library

முன்னுரை

அண்மைக்காலம் வரை, வருடம் ஒரு முறை வைகுண்ட ஏகாதசி அன்று மட்டுமே எனக்கு தரிசனம் அருளிவந்த ஆனைமலை யோக நரசிங்கப் பெருமாள் தற்போது அடிக்கடி என்னை வருவித்து அருளிக் கொண்டிருக்கிறார்.

சுமார் 2 மாதங்கட்கு முன்பு, நரசிம்மப் பெருமாள் தன் உத்ஸவ மூர்த்தியின் வலது அபயகரத்தில் சாற்றப்பட்ட சந்தனத்தை, அச்சுக்கலையாமல், பிரசாதமாக பெறச் செய்து, என்னை ஆட்கொண்டமை அவர் கருணையே.

கண்ணன் என்ற ஒரு பக்தர் மூலம் துவக்கிக் கொண்ட தன் திருக்குளத் தூய்ப்பிப்பு திருப்பணியில் பங்கு கொள்ளச் செய்ததும், தொடர்ந்து என்னை நரசிம்ம அவதாரம் பற்றியே சிந்தித்து, செய்திகளை சேகரிக்கச் செய்து, அறிந்ததை நூலாக பதிப்பிட செய்ததும் ஆனைமலை யோக நரசிம்மப் பெருமாளே.

ஆலயத்துடன் தொடர்புடையவர்கள், பக்தர்கள், அருகுள்ள கிராம மக்கள், அறிஞர்கள் மற்றும் அன்றோரும், இன்றோரும் எழுதிய நூல்கள் மூலம் அறிந்த செய்திகளின் தொகுப்பே நரசிம்மர் வழிபாடும் தலங்களும் ஆகும்.

முக்கியமாகத் தோன்றிய சில செய்திகளே கொடுக்கப் பட்டுள்ளன. நூலின் நோக்கம் நரசிம்மரைப் பற்றிய ஆய்வல்ல. நம் அறிவிற்கு அப்பாற்பட்ட அரியவனை, பாலகன், பிரகலாதனைப்போல, அடிபணியும் பேற்றை, பல்லோரும், மென்மேலும், பெற்றிட வேண்டும் என்பதே அவா.

அருகிலுள்ள திருமோகூரில் தன் திருச்சக்கரத்தின் (சக்கர்த்தாழ்வாரின்) மூலம், அதிகரித்து வரும் அன்பர்களுக்கு அருள்வது போல, அச்சக்கரத்தை பிரயோகிக்கும் வடிவில், தான் அருளும் நரசிங்கத்திற்கும் அடியவர்களை அழைப்பித்து நன்மை சேர்ப்பதும் பெருமாளின் பொறுப்பு. - *அவனருள்*

Koviloor Digital Library

1. விஷ்ணு அவதார சன்னதிகள் - சில செய்திகள்

அவதாரங்கள் எண்ணற்கரியன. பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய முக்கிய மும்மூர்த்திகளும் பல உருவில் பன்முறை அவதரித்திருந்தாலும், பொதுவாக, அவதாரம் என்றவுடன் நாம் விஷ்ணுவையே நினைக்கிறோம்.

அவரின் முக்கியப்பத்து அவதாரங்களிலும் சில மட்டுமே புராணங்களிலும், இதிகாசங்களிலும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, ராமனையும், கிருஷ்ணனையும் போற்றுகின்ற அளவுக்கு பிற அவதாரங்கள் பாடப்படவில்லை.

மேலும் வராக அவதாரம், மத்ஸ்ய அவதாரம், கூர்ம அவதாரம், வாமனஅவதாரம் போன்றவற்றின் அவதாரப் பணி சீக்கிரமே நிறைவேறி விடுவதால். அந்த அவதார மூர்த்திகட்கு, தனிக்கோயில், தனிச்சன்னதி அதிகமில்லை

பெரிய அளவிலான பெருமாள் ஆலயங்களில் கூட, எல்லோருக்குமாக சேர்ந்தே தசாவதார சன்னதி உள்ளது. சில கோயில்களில் மட்டுமே, மூலவர் சன்னதியோடு, பிற அவதார மூர்த்திகளுக்கு தனிச் சன்னதிகள் உள்ளன. அவற்றிலும் ராமர், கிருஷ்ணருக்கே அதிகமாக உள்ளன. மேலும், சுதர்சனர் (சக்கரத்தாழ்வார்) சன்னதியுள்ள ஆலயங்களில், சக்கரத்தாழ்வாரின் பின்புறம் நரசிம்மரின் உருவம் அமைக்கப்படுவதால், திருச்சுற்றில், நரசிம்மருக்கு தனிச்சன்னதி இருப்பது குறைவே.

தனிச்சன்னதி ஏற்படுத்தும் போது, வடமேற்கு (வாயு) மூலையில் அமைப்பது வழக்கமாக உள்ளது.

Koviloor Digital Library

2. நரசிம்மர் அவதார வரலாறு

மகாவிஷ்ணு இரண்யகசிபுவின் கொடுமையில் இருந்து பிரகலாதனைக் காப்பாற்றவும், இரண்யகசிபுவின் அறியாமையைப் போக்கவும் எடுத்த அவதாரமே நரசிம்ம அவதாரமாகும். பக்தனோ, பகைவனோ யாராயினும் சரி எவர் காட்டிய இடத்திலும் தான் இருப்பதை மெய்ப்பிப்பதற்காகவே நரசிம்ம மூர்த்தி தூணிலிருந்து தோன்றுகிறார்.

3. நரசிம்ம அவதார தத்துவம்

கோள்களும் நக்ஷத்திர மண்டலங்களும் எண்ணற்கரியவை. கணக்கிட இயலாத அளவுக்கு, அவை கோடிக் கோடிக் கோடி வருடங்கள் பழமையும் ஆனவை. அவற்றில் எல்லாம் நம்மால் நம்பமுடியாத அளவுக்கு, பூதாகாரமான மிகமிகப் பெரிய உயிரினங்கள் பல வினோத வடிவங்களில் இருக்கின்றன. இவ்வுண்மையை, பல நாட்டவரும், கலாச்சாரத்தவரும், அண்மைக் காலத்தில் தான், அகழ்வு ஆராய்ச்சிகள் மூலமாக, அறியத் துவங்கியுள்ளனர்.

அது வரை, பாரத மண்ணினர், வேதங்களிலும் புராணங்களிலும், இதிகாசங்களிலும் விவரித்த, ஒட்டு (hybrid)த்தாவரங்கள் போன்ற, வினோதமான உருவங்களை மிருக உறுப்பும், மனித உறுப்பும் இணைந்த நரசிம்மர் போன்ற வடிவங்களை பொய் என்றே சாதிக்க முயன்றனர். இருந்திருக்காலம் என்று கூட ஏற்றுக் கொள்ளவில்லை.

Koviloor Digital Library

கிராமத்திலேயே வாழ்பவர்களுக்கு, நகரங்களில் உள்ள சுகபோகப் பொருட்கள் தெரிவதில்லை; உயிரைப் பறிக்கும் பல ஆபத்துக்களிருப்பதும் தெரிவதில்லை. அதே போல, பண்டைக் காலத்தில் வாழ்ந்தவனுக்கு எதிர்கால உலகின் போகங்களும் தெரிந்திருக்காது; மனிதனை மாய்க்கக்கூடிய பொருள்களும், நிலைகளும் பெருகிவிடுவதும் தெரிந்திருக்காது.

இந்த நிலையினால் தான், பல அசுரர்களும், தேவர்களும், தம் பேராசைகள் நிறைவேறுவதற்காகத் தவம் செய்து, பின்னர், பெருநஷ்டம் அடைந்ததைக் காண்கிறோம். கற்பனை செய்யவும், அனுமானிக்கவும் முடியாத அண்ட சராசரங்களில் அவர்கள் ஆசைப்பட்டதின் பரிமாணமும், சாவு ஏற்படுத்தக் கூடியதாக நினைத்த சூழல்களும் மிகமிகக் குறைவே.

பிறந்தவை மறைந்தே ஆக வேண்டும்; எதுவுமே, என்றுமே ஒரே உருவில் இருக்க முடியாது என்பதும் இயற்கை நியதி. இதை உணராது, பின்னால் தேவையாயிருக்கும் என்று எண்ணி, நாம் தற்போதைய செலவைக் குறைத்துக் கொண்டு, நீண்டகால சேமிப்புத் திட்டங்களில் பணம் கட்டுகிறோம். இன்னின்ன வகைச் செலவினமோ, ஆபத்தோ வந்தால் அவற்றைச் சமாளிப்பதற்காக, அலுவலகங்களிலும், வங்கிகளிலும், ஆயுள் காப்பீட்டுக் கழகங்களிலும், இன்னும் பல சேமிப்புத் திட்டங்களிலும் சேருகிறோம்.

இது போன்ற செயல்பாடே, முன்பு, பல்லோரும் தவத்தினால் போகங்கள் பெற்றதும், இறப்பை ஒத்திப்போட முயன்றதும் ஆகும்.

Koviloor Digital Library

காப்பீட்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடியே நாம் இறக்கப் போவதில்லை. அவ்வகையிலேயே இறந்தாலும் கூட சேமித்த பணத்தை, நாம் அனுபவிக்கப் போவதில்லை. மேலும், பின் சந்ததியினரை நாம் நினைத்தபடியே, நம் சேமிப்பை பயன்படுத்திடச் செய்யவும் நம்மால் முடியாது.

பிறப்பும், மறைவும் நிரந்தர தோற்ற -அழிவு அல்ல. இதை உணராது, சாமர்த்தியராக நினைத்துக் கொண்டு, நமக்குத் தெரிந்த அனைத்து வகைகளாலும் இறப்பு வரக் கூடாது என வரம் வேண்டுவது அசட்டுத்தனமே.

உதாரணமாக, அருகிலுள்ள சிறு பள்ளத்தில் விழுந்தாலும் சாவு ஏற்படலாம் என்பதை உணராது, நாம் மலையிலிருந்து உருண்டாலும் சாகக் கூடாது என்று வரம் கேட்கிறோம்; தன் காதுக்குள் அல்லது தும்பிக்கையுள் நுழைந்த மிகச் சிறு எறும்போ, சிலந்தியோ கூடத் தன் உயிரைப் போக்கலாம் என்பதை அறியாத யானை, பெரிய உயிரினங்களால் ஆபத்து வரக்கூடாது என்று கேட்கிறது.

இது போலவே தான் இராவணன், மனிதன் தன்னை என்ன செய்திட முடியும் என்ற இறுமாப்பில், அவனை மட்டும் குறிப்பிடாது, பிற எல்லாவற்றிலிருந்தும் சாகாவரம் பெற்று, வரங்களின் பயன்கள் விரயமானவுடன், மனித வடிவில் வந்த இராமனால் அழிந்துபடுகிறான்.

பல்-இன இணை-உருவங்கள் இருக்க முடியும் என்றும், அவற்றாலும் இறப்பு ஏற்படலாம் என்றும் அறியாததால் தான் இரண்யகசிபுவும், இணை உருவாக நரசிம்ம மூர்த்தியால் அழிகிறான்.

தொன்று தொட்டு, சிலர், தானே தெய்வமெனவும், தனக்கு மேலான சக்தியில்லை; யாவரும் தன்னை மட்டுமே வழிபட வேண்டும் என்றும் கூறி, பல்லோரை, பல்வகையிலும் பயமுறுத்தி, பலாத்காரப்படுத்தி வந்துள்ளனர். அவர்களில் இரண்யகசிபுவும் ஒருவன். அத்தகையவரின் போக்கைக் கண்டிப்பதற்காகவும், களைவதற்காகவும் பரம்பொருள் எடுத்த அவதாரங்களில் நரசிம்ம அவதாரமும் ஒன்று.

நமக்கு ஆசைப்படவும் தெரியவில்லை; அழியக் கூடிய நிலைகளும் தெரியவில்லை. நம் சிற்றறிவுக்கு எட்டியதே முழுமை-உண்மை என்று நினைத்து, செயல்பட்டு, சீரழிவதை விட நம்மை உருவாக்கிய சக்தி, நமக்கு நன்மையானதையே நவிலும் என்பதை உணர்த்திட நிகழ்ந்தவையே, அனைத்து அவதாரங்களும் ஆகும்.

4. நரசிம்மர் வழிபாடு

நரசிம்மர். பாரதம் முழுதும் வணங்கப்பட்டாலும், தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடக மாநிலங்களில் தான், அவருக்குத் தனிக்கோவிலும், சிறப்பு வழிபாடும் அதிகம்.

வைகாசி மாதம் வளர்பிறை சதுர்தசியன்று சூரியன் மறையும் நொடியில் (பகலுமின்றி, இரவுமின்றி) மாலை சந்திப் பொழுதில், நரசிம்மரை வழிபடுவதே நரசிம்ம ஜயந்தியாகும்.

சோமப்பிரதோஷமும், சனிப்பிரதோஷமும் சிறப்பு போல நரசிம்ம ஜயந்தி திங்கட்கிழமையிலும், நரசிம்மர் அவதரித்த நட்சத்திரமான சுவாதியிலும் வழிபடுதல் சிறப்பு.

இவ்விரதத்தை அனுஷ்டித்ததாலேயே, கயவனாக இருந்த சுவேதன், மறுபிறவியில், பிரகலாதனாகப் பிறந்து, பெருமாள் அருள் பெற்றதாக, விஷ்ணுவே கூறியிருப்பதால், அவர் நரசிம்மராக உருவெடுத்தது பிரகலாதனுக்காக மட்டுமல்ல, ஒரு முறை தான் அல்ல என்பதும் தெரிகிறது.

இறைவனை வழிபட எந்நேரமும் உகந்ததே என்றாலும், நம் வசதி கருதி, சில நல்—நிகழ்வுகளோடு தொடர்புடைய நாட்களில் அல்லது நேரத்திலாவது வழிபட வேண்டும் என்பதற்காகாகவே சதுர்த்தியில் / சஷ்டியில்; செவ்வாய் / வெள்ளியில்; காலை அல்லது மாலையில் என்று வெவ்வேறு சமயத்தில் வெவ்வேறு தெய்வங்களை வழிபடுவது மரபாக உள்ளது.

அன்றாட நரசிம்மர் வழிபாட்டில், பிரதோஷ வேளை (சூரியன்மறைவுக்கு முன் 1 1/2 மணியும்,பின் 1 1/2 மணியும்) ஆக மொத்தம் (மாலை 4 1/2 முதல் 7 1/2 வரை 3 மணி) நேரம் சிறப்பு. அதுவும், சதுர்தசி நாளில் சிறப்பு. சித்திரை மாத வளர்பிறை அக்ஷய திருதியை வழிபாடும் சிறப்பு.

நரசிம்மர் விஷ்ணுவே என்பதால், பொதுவாக, விஷ்ணு வழிபாட்டில் பயன்படுத்தும், மலர்கள், வஸ்திரம், நைவேத்யம் ஆகியவற்றை உபயோகிக்கலாம். எனினும் செவ்வரளி போன்ற சிகப்பு வண்ண மலர்களும், சர்க்கரைப் பொங்கல், பானகம் போன்ற இனிப்புகளும் சிறப்பு. ஹோமத்திற்கு தேன் கலந்த மல்லிகை மலர்கள் உகந்தது: குளுமைப் பொருளான சந்தனத்திலும் செஞ்சந்தனமும், சந்தனாதி தைலக்காப்பும் சிறப்பு.

அவரவருக்கு ஏற்றபடி 1,3,6,8,10,19,32,62 அக்ஷர நரசிம்ம மந்திரத்தை ஜபிக்கலாம்; துதிகளைக் கூறிடலாம்.

Koviloor Digital Library

5. தமிழகத்துள்ள நரசிம்மர் ஆலயங்கள்

விஷ்ணு மூலவராக உள்ள ஆலயங்கள் தமிழகத்தில் சுமார் 5,200 உள்ளன. அவற்றில், பெருமாளுக்கு வழங்கும் சுமார் 600 நாமங்களில், பரவலாக உள்ளதில் 'நரசிம்மரும் ஒன்று அப்பெயரோடு சுமார் 100 கோயில்கள் உள்ளன.

அங்கெல்லாம், பெருமாள் வெறுமனே நரசிம்மர் என்று மட்டும் அழைக்கப் படுவதில்லை

உருவ அமைப்பு, ஏந்தியுள்ள ஆயுதங்கள், பார்வை நிலை, அணிந்துள்ள ஆபரணங்கள், இருக்கும் பாங்கு, அருட்தன்மை போன்றவற்றின் அடிப்படையில் வெவ்வேறு அடைமொழியோடு 30 திருப்பெயர்கள் உள்ளன. அவை

1. அகோபில நரசிம்மர்
2. அழகிய சிங்கர்
3. அனந்த வீரவிக்ரம நரசிம்மர்
4. உக்கிர நரசிம்மர்
5. கதலி நரசிங்கர்
6. கதலி லக்ஷ்மி நரசிம்மர்
7. கதிர் நரசிம்மர்
8. கருடாத்ரிலக்ஷ்மிநரசிம்மர்
9. கல்யாண நரசிம்மர்
10. குகாந்தர நரசிம்மர்
11. குஞ்சால நரசிம்மர்
12. கும்பி நரசிம்மர்
13. சாந்த நரசிம்மர்
14. சிங்கப் பெருமாள்
15. தெள்ளிய சிங்கர்
16. நரசிங்கர்
17. பானக நரசிம்மர்
18. பாடலாத்ரி நரசிம்மர்
19. பார்க்கவ நரசிம்மர்
20. பாவன நரசிம்மர்
21. பிரஹ்லாத நரசிம்மர்
22. பிரஹ்லாத வரதநரசிம்மர்
23. பூவராக நரசிம்மர்
24. மாலோல நரசிம்மர்
25. யோக நரசிம்மர்
26. லட்சுமி நரசிம்மர்
27. வரதயோக நரசிம்மர்
28. வராக நரசிம்மர்
29. வியாக்ர நரசிம்மர்
30. ஜ்வாலா நரசிம்மர்

Koviloor Digital Library

6. முக்கிய நரசிம்மத் தலங்கள்

மிகப்பிரபலமான நரசிம்மர் தலங்களும் அவற்றைப் பற்றி சில முக்கிய குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

அ) ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த தலங்கள்

ஜோதிஷ்மட்: உ.பி. மாநிலம். ஆதிசங்கரர் எழுப்பிய ஆலயத்தில் உக்ர நரசிம்மர். 246449.

அஹோபிலம் (சிங்கவேள் குன்றம்) : ஆந்திரா மாநிலம் *கடப்பா மாவட்டம்* நந்தியாலின் தென்கீழ் 48 கி.மீ. *நவநரசிம்ம* க்ஷேத்ரம். மலையில் 9 கி.மீ.ல் *அகோபில நரசிம்மர் கோயில்* குடவ்வரை. நரசிம்மர் வெளியான தூண் 2 கி.மீ.ல் உள்ளது. அடிவாரத்து *பிரகலாத வரதன்* கோயிலே அகோபில மடத்தின் தலைமையகம். இம்மடத்தின் *அழகிய சிங்க ஜீயர், ஸ்ரீரங்கத்தில் செய்த அபூர்வ கோபுரத் திருப்பணி*யை எவரும் மறக்க முடியாது. ஆதிசங்கரரை, காபாலிகர்களிடமிருந்து, நரசிம்மர் காப்பாற்றிய தலம். (மங்க– திருமங்) (பாசு – 10) 518454.

சோளிங்கபுரம்(திருக்கடிகை): தமிழ்நாடு, வேலூரின் வடகீழ் 40கி.மீ. மலையில் 500 அடி உயரத்தில் *யோகநரசிம்மர் ஆலயம்.* அடிவாரத்தில் உத்ஸவமூர்த்தி மட்டுமே உள்ளார். சிறிது நேரம் தங்கினாலே முக்தியளிப்பது (மங்க– பேயா, திருமங்) (பாசு – 4) 631102.

வேளுக்கை: காஞ்சிபுரத்தில் திருத்தண்கா சமீபம். *ஸ்ரீ அழகியசிங்கர் கோயில்.* மேற்கு திசையில் அசுரர்களை தடுத்தபின், பெருமாள், யோக நரசிம்மராக, தானே விரும்பித் தங்கிவிட்ட இடம். (மங்க–பே) (பாசு – 4) 631501.

Koviloor Digital Library

திருவாழித் திருநகரி : சீர்காழியின் தென்கீழ் 6 கிமீ.ல் திருவாழி. அங்கிருந்து வடகீழ் 4 கிமீ திருநகரி. தேவாரத்தில் வலஞ்சுழியும், கொட்டையூரும் போல திருவாலி *லக்ஷ்மி நரசிம்மரும்,* திருநகரி *தேவராஜனும்* சேர்ந்தே போற்றப்பட்டுள்ளனர். நாங்கூர் 11 திருப்பதிகளுள் ஒன்று.

சிவத்தலம். சத்திமுத்தத்தில் சிவனும், அம்பிகையும் போல பிராட்டியும் பெருமாளும் ஆலிங்கனக் கோலம். திருமங்கையாழ்வாரைத் தடுத்து ஆட்கொண்டு அஷ்டாக்ஷரம் உபதேசித்த பதி. (மங்க – குல, திருமங்) (பாசு –42) 609106.

நாகை (நாகப்பட்டினம்) : *நீலமேகப்பெருமாள் கோயில்.* தஞ்சையின் கிழக்கே 90 கீ.மீ. ஆபூர்வமான அஷ்டபுஜ நரசிம்மர் திருமேனி உள்ளது. துருவனும் ஆதி சேடனும் பணிந்தது. (மங்க – திருமங்) (பாசு –10) 611001.

தஞ்சைமாமணிக்கோயில் (வெண்ணாற்றங்கரை): தஞ்சைக்கு வடக்கே திருவையாறு வழியில் 6 கி.மீ. அருகருகே 3 பெரிய விஷ்ணு கோயில்கள். ஒன்றாகவே பாடப்பட்டவை. *நீலமேகப் பெருமாள், மணிகுன்றப் பெருமாள்* மற்றும் *நரசிம்மன்* கோயில்கள்.

தஞ்சகன், தண்டகன், கஜமுகன் ஆகியோரின் கெடுமையிலிருந்து மக்களைத் திருமால் காத்த பதி. *திவ்யப்ரபந்தம் கூறி வணங்கிடலாகாத தினங்களில் தேசிகப்ரபந்தம் பாராயணம் செய்யுமாறு நயினாச்சாரியார் நியமித்த பதி.* (மங்க –நம், பூத, திருமங்) (பாசு – 5) 613003.

திருக்கோஷ்டியூர் : (தென்) திருப்பத்தூரிலிருந்து சிவகங்கை வழி 7 கி.மீ. *உரகமெல்லணையான் கோயில்.*

Koviloor Digital Library

மகாவிஷ்ணு நின்று, இருந்து, கிடந்த, நடந்து, கூத்தாடும் 5 நிலையில் தரிசனமளிக்கும் பதி. 1000 ஆண்டுகட்கு முன்பே, *"கீழோர்"* எனப்பட்டவரை, *திருக்குலத்தோர்* என்று கூறி, தான் நரகம் சென்றாலும், அனைவரும் உய்வதற்காக, *யாவரும் அறியுமாறு ராமானுஜர் நாராயண மந்திரத்தை உரக்கக் கூவிய தலம்.*

மகாமகக்கிணற்று சிறப்பு. வைணவ மறுமலர்ச்சியில் முக்கிய ஸ்தலம். சிவனும் சேர்ந்து அருளும் பதி. மயனும், விஸ்வகர்மாவும் இணைந்து எழுப்பியது. தென்புற நரசிம்மர் தெற்காழ்வார் இரண்யனைப் பிடித்த கோலம். வடபக்க நரசிம்மர் வடக்காழ்வார் இரண்யவதம் செய்த கோலம். இரண்டுமே மிகப்பெரிய திருவுருவங்கள். (மங்க– பெரி, திருமங், பூத், பேயா, திருமழிசை) (பாசு – 39) 623210.

ஆ) பிற நரசிம்மத் தலங்கள் (மாநில வாரியாக)

I. ஆந்திரம்

1) எர்ரகுண்டா- கடப்பாவிலிருந்து 40 கி.மீ. லக்ஷ்மி நரசிம்மர், யோக நரசிம்மர் ஆலயங்கள். 523327.

2) யாதகிரி – ஐதராபாத்திலிருந்து 70 கி.மீ. மலையில் லக்ஷ்மி நரசிம்மர் ஆலயம். 375 படிகள்.

3) தர்மபுரி – கோதாவரி நதி மேற்குக் கரை (கரிம் நகரிலிருந்து 16 கி.மீ) இரு நரசிம்மர் ஆலயங்கள். 505425.

4) பாபட்லா – தெனாலியிருந்து 43 கி.மீ. ஜ்வாலா நரசிம்மர் கோயில். 422101

5) அகிரபள்ளி – விஜயவாடாவிலிருந்து செல்லலாம். வியாக்ர நரசிம்மர் ஆலயம்.

Koviloor Digital Library

6) மங்களகிரி - பெசவாடாவிலிருந்து 13 கி.மீ. மலையில் 400 படிகள். நரசிம்மருக்கு வாயில் பானகம் விடுகிறார்கள். 522503.

7) சிம்மாசலம் - வால்டேரிலிருந்து 8 கி.மீ. மலை மேல் 1000 படிகள். வராஹ நரசிம்மர். உக்ர மூர்த்தி என்பதால் எப்போதும் சந்தனக் காப்பு. சித்திரை மாத வளர்பிறை அக்ஷய திருதியையில் மட்டும் புது சந்தனக் காப்பு . 530004

8) பூமினிபட்டினம் : விஜிய நகரத்திலிருந்து 20 கி.மீ. லக்ஷ்மி நரசிம்மர்.

9) கொருகொண்டா : ராஜமுந்திரியிலிருந்து 20 கி.மீ. மலையில் 600 படிகள். சாத்வீக நரசிம்மர். 533289.

10) லக்ஷ்மி புரம் : கரிம் நகர் மாவட்டம் மலையில் நவநரசிம்மர். இரண்டாவது அகோபிலம் என்பர். 521131.

11) திராக்ஷாராமம் : காகினாடா சமீபம் புகழ் பெற்ற பீமேஸ்வரர் கோயிலில் க்ஷேத்ராபாலராயுள்ள நரசிம்மர். 533262

12) திருப்பதி : உலகப்புகழ் வேங்கடாசலபதி கோயிலில் உள் பிரகாரத்தில் தனி நரசிம்மர் சன்னதி. 517504.

13) கம்மம் : ஸ்தம்பம் (தூண்) என்பது கம்மம் ஆகிவிட்டது. ஸ்தம்ப நரசிம்மர் கோயில். 507001.

II. கர்நாடகம்

1) நரசிப்பூர் திருமுக்கூடல் - மைசூரின் தென்கீழ் 30 கி.மீ. காவிரி, கபில, ஸ்படிக நதிகளின் சங்கமத்தலம். குஞ்சால நரசிம்மர். ஒரு கையில் குண்டுமணியும், மறு கையில் தராசும் ஏந்திய அபூர்வத் திருமேனி. 502313.

2) *அகர* : மைசூர் மாவட்டம் எலந்தூர் தாலுக்கா. ஒரே திருமேனியில் யோக, லக்ஷ்மி, உக்கிர, ஜ்வால, பிரகலாத வரத முகங்களுடைய பஞ்சமுக நரசிம்மர். 571485.

3) *பாண்டவபுரம்* : ஸ்ரீரங்கப் பட்டிணத்திலிருந்து 32 கிமீ. 400 படிகள். மலையில் யோக நரசிம்மர் ஆலயம். 571484.

4) *சாளக்கிராம்* : மைசூர் மாவட்டம் கிருஷ்ணராஜ நகரின் வடமேற்கு 15 கி.மீ. 571604.

5) ஹோலே *நரசிப்பூர்* : ஹாஸனிலிருந்து தென்கீழ் மைசூர் வழி 32 கி.மீ. பிரஸன்ன நரசிம்மர். 573211.

6) *சிபி* : தும்கூர் மாவட்டம், சிரா தாலுக்காவில் சாளக்கிராம வடிவில் நரசிம்மர்.

7) *ஹம்பி* : பெல்லாரி மாவட்டம் ஹாஸ்பேட் தாலுக்கா 22 அடி உயர நரசிம்மர். 583289.

8) *கனககிரி* : ராய்சூர் மாவட்டம், கங்காவதி தாலுக்கா வடமே. 20 கி.மீ. லிங்க வடிவில் லக்ஷ்மி நரசிம்மர். 584119.

9) *கர்பரா* : பிஜப்பூர் மாவட்டம் தாலுக்காவில் அரசமரமே நரசிம்மராக வழிபாடு.

10) *ஹலசி* : பெல்காம் மாவட்டத்தில் தெற்கே காநாபுர தாலுக்கா. பூவராக அனந்தவீர விக்கரம நரசிம்மர். 591142.

11) *முடுதகாண ஹுப்ளி* : பெல்காம் சமீபம் சம்பகாவ் வட்டம். அஸ்வத்த நரசிம்மர். 591118.

III. மஹாராஷ்டிரா மாநிலத்தில் ராகேர் மற்றும் சார்தானா ஆகியவை நரசிம்மத் தலங்கள்.

IV. ஒரிசா மாநிலம் ந்ருசிங்கநாத் ஒரு நரசிம்மர் தலம்.

Koviloor Digital Library

V. தமிழ்நாடு

1) குறையலூர் : சீர்காழியிலிருந்து 8 கி.மீ. நரசிம்மர் கோயில். நாங்கூர்ப் பகுதி பஞ்ச நரசிம்மத்தலத்தில் ஒன்று. பிற ஊர்கள் : மங்கைமடம் ; திருநகரி ; திருவாலி. 609106.

2) நாமக்கல் : ஊரின் நடுவே உள்ள மலைமுகட்டில், மேற்புறம் நரசிம்மர் சன்னதி. 637001.

3) சிங்கப்பெருமாள் கோவில் : சென்னையிலிருந்து (தாம்பரம் வழி) 48 கி.மீ. உக்ர நரசிம்மர் கோவில். 603204.

4) திருவதிகை : பண்ருட்டி அருகே 1 கிமீ.ல் சரநாராயணர் கோயிலில் பள்ளி கொண்ட நரசிம்மர் சிறப்பு 607106.

5) காஞ்சிபுரம் : சங்கராச்சாரியார் மடத்தில் நரசிங்க சாளக்கிராமம் பூஜிக்கப்படுகிறது. 631501.

6) ஸ்ரீரங்கம் : பார்புகழ் ரெங்கநாதர் கோயிலில் கம்பனின் இராமாயணத்தை அங்கீகரிப்பதற்கு விமான சிறபத்திலிருந்து வெளிவந்த நரசிம்மரை மேட்டழகிய சிங்கர் என்பர். 620006.

7) அவனியாள்புரம் : அண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அருகில் விஷ்ணு ஆலயத்தில் 5 நரசிம்மர்கள் வழிபாடு. 604504

VI. பாண்டிச்சேரி மாநிலம் : சிங்கரி கோயில் என்ற ஊரில் 18 கை நரசிம்மர். 605007.

VII. கேரள மாநிலம்

1) கடுங்கலூர் : ஆலவாயிலிருந்து 2 கி.மீ. நரசிம்மர் கோயில். 683103.

2) துறவூர் : ஆலப்புழையிலிருந்து 35 கி.மீ. இரண்டு நரசிம்மர் கோயில்கள். 688532.

3) குருவாயூர் : கிருஷ்ணன் கோயிலில் நாராயண பட்டத்ரி தன் குருவிடம் வாங்கிக் கொண்ட நோய் நீங்கிட நாராயணீயம் இயற்றும் போது விஷ்ணு நரசிம்மக்காட்சி அளித்த தலம். 680101

Koviloor Digital Library

7. மதுரை ஆனைமலை நரசிங்கம் யோக நரசிங்கப் பெருமாள் ஆலயம்

மதுரைக்கு வடகிழக்கே, மேலூர் வழியில், 4 கி.மீ தொலைவிலுள்ள ஒத்தக்கடைக்கு அருகே, யானை படுத்திருப்பது போல், தென்மேற்கு – வடகிழக்குப் போக்கில் சுமார் 250 அடி உயரமும், 5 கி.மீ. நீளமும் உள்ள மலையே ஆனைமலை என்று அழைக்கப்படுகிறது.

இந்த ஆனைமலையின் வடபுறம் உள்ள நரசிங்கம் கிராமப்பகுதியில் பழமையான முருகன் குடவரைக் கோயிலுக்கு அருகில், யோக நரசிங்கப் பெருமாளுக்கும் ஒரு குடவரை ஆலயம் உள்ளது. ஆலய வாசலுக்கே செல்லும் வகையில் மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து அடிக்கடி மினிபஸ் வசதியுள்ளது.

இரண்யகசிபுவை அடக்கிட நரசிம்மராக வந்தவர்க்குக் கோயில் உள்ள ஊரை நரசிங்கம் என்பது பொருத்தமாக இருப்பது போல, இதன் பண்டைப் பெயர்களான நரசிங்க மங்கலமும் இரணியமுட்டமும் பொருத்தமாகவே உள்ளன.

கி.பி. 8,9ம் நூற்றாண்டுகளில் மிக வளப்பமாக இருந்த இப்புகுதியில், மதுரையை ஆண்ட சடையவர்மன் பராந்தக பாண்டியனின் அமைச்சர் மாறன் காரி யோக நரசிம்மருக்குக் கோயில் எழுப்பியதாகத் தெரிகிறது.

சுமார் 6 அடி அகல, நீள, உயரக் கருவறையும், யோக நரசிம்மப் பெருமாள் திருவுருவும், கருவறைக்கு முன் உடையவரும் நம்மாழ்வாரும் உள்ள அர்த்த மண்டபமும் குடைவு அமைப்புகள். பிற மண்டபங்கள் கட்டுமானமே.

Koviloor Digital Library
கருடாழ்வார் மண்டபமும், ஆலய வளாகத்தின் வடகீழ் பகுதியில் உள்ள நரசிங்கவல்லித் தாயாரின் தனிக்கோயிலும் பிற்கால அமைப்புகளாகத் தெரிகின்றன.

ஆலயத்தை ஒட்டி கிழக்கு, வடகிழக்காக, மலையின் அடிவாரத்திலேயே சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் சதுரவடிவ நன்னீர்ப் பொய்கை உள்ளது.

காலவசத்தால், சம்பு, தர்ப்பை மற்றும் காட்டுச் செடிகள் வளர்ந்து, நீர்ப்பரப்பே தெரியாத அளவுக்கு மறைந்திருந்த பொய்கையின் நிலை தற்போது மாறிவிட்டது. பக்தர்கள் மனதில் பெருமாள் ஏற்படுத்திய உந்துதலால், பொய்கை பழைய பொலிவை மீளப் பெற்றுள்ளது.

குடவரைக் கோயிலை திருச்சுற்றிட வாய்ப்பில்லாததால் பண்டைய மரபுப்படி, திருக்குளத்தைச் சுற்றி வந்த பின் ஆலய தரிசனம் செய்தல் சிறப்பு.

கங்கை நீரும், காவிரி நீரும் போற்றப்படுவது போல, மிகச் சுவையாக உள்ள இந்தப் பொய்கையின் தீர்த்தமும் பல உடல், மன அல்லல்களைப் போக்கும் தனித்தன்மையும், சிறப்பும் பெற்றிருப்பதை, முந்தைப் புராணங்களும், இன்றையோரின் விவரிப்புக்களும் தெரிவிக்கின்றன.

இத்திருக்குளத் தீர்த்தத்தைப் பெருமாள் வழிபாட்டிற்கு எடுத்து வருவதற்காக, ஆலயத்தின் கிழக்குத் திருமதிலில் உள்ள வாயில், எப்பொழுது, எதற்காக அடைபட்டது என்பதை அறிய இயலவில்லை.

வசிக்கும் இல்லமாயினும், வழிபட்டுப் பயனடையும் இறைக் கோயிலாயினும் கிழக்கு அல்லது வடகிழக்கில் இருந்த வாயில்கள் அடைப்படுவது உகந்தது அல்ல.

Koviloor Digital Library

பல்லோரும் நாடி வருகின்ற நிலை குறைவதோடு, அருகிலுள்ளோர் வருவதும் கூடக் குறைந்து விடுவதும், அனுபவ உண்மை; வாஸ்து சாஸ்திர செய்தியுமாகும்.

ஆலயநிர்மாண வல்லுனர்களும், ஆலய நிர்வாகிகளும் ஆருடம் சொல்லும் அருளாளர்களும் கூடி அடைக்கப்பட்ட வாயிலை திறந்துவிட்டால், யோக நரசிம்மரின் அருளைப் பெறுவோரின் எண்ணிக்கை கூடிடும்.

மாசிப் பௌர்ணமியில், பெருமாள் ஆலயத் திருக் குளங்களில் நடைபெறும் கஜேந்திர மோக்ஷ திருவிளையாடல் இத்திருக்குளத்தில் இன்றும் நடைபெறுகிறது.

இந்த ஆலயத்தில் கொடி மரம் இல்லாததால், நின்ற கோலத்திலுள்ள நரசிம்ம உத்சவர் திருமேனி கோயிலுக்கு வெளியே வருவதில்லை. இங்கிருந்து 4 கி.மீ.ல் உள்ள, ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திருமோகூர் காளமேகப் பெருமான் உத்சவ மூர்த்தியே இத்திருவிழாவிற்காக நரசிங்கத்திற்கு எழுந்தருளுகிறார்.

ஆலயங்களில் நிறுவப்படும் கொடிமரத்தின் உயரம் கருவறைக்கு மேல் எழும்புகின்ற விமானத்தின் நீள, அகல, உயர பரிமாணத்தின் படி அமைப்பதே பொது மரபு.

யோக நரசிம்மரின் குடவரைக் கருவறைக்கு மேல் ஆனைமலை வானளாவி இருப்பதும், இங்கு கொடிமரம் வைக்கப்படாமைக்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

பத்துப்பாடல் ஆசிரியர் பெருங்கௌசிகனார் பிறந்த ஊர் யோக நரசிம்மர் அருளும் இந்த நரசிங்கம் கிராமமே.

Koviloor Digital Library

8. ஆதி சங்கரரும், நரசிம்மரும்

இல்லற வாழ்வு பற்றியும் வாதிடும் நிலையைப் பெறுதற்காக ஆதிசங்கரர், தன் உடலை ஒரு காட்டு மரத்தில் மறைத்து விட்டு, இறந்துவிட்ட அமரசன் என்பவனின் உடலில் புகுந்து, சிலகாலம் கழித்து, அறிய வேண்டியது நிறைவானவுடன், தம் பழைய உடலைத் தேடிச் செல்கிறார்.

அப்போது, உடல் பாதி எரிந்து கொண்டிருந்தாலும் சங்கரர் அதனுள் புகுந்தவுடன் ஏற்பட்ட தாங்க முடியாத உஷ்ணத்தைத் தணிக்க, சுவர்ண நரசிம்மரைத் துதித்த பின்னரே முன்பிருந்த தேகப் பொலிவை மீளப் பெறுகிறார்.

பின்னொரு சமயம், காபாலிகர்கள் சங்கரரைக் கொல்ல முற்பட்ட போது, அவரின் சீடரான பத்மபாதரின் மூலம், சங்கரரைக் காப்பாற்றியது நரசிம்ம மூர்த்தியே.

இதனால் தான், கொலை செய்யப்படுவோமோ என பயப்படுபவரும், தீக்காயத்தால் அவதிப்படுபவர்களும், ஆதிசங்கரர் இயற்றிய கராவலம்பனத் துதியையும் பஞ்சரத்தினத்தையும் நரசிம்மர் வழிபாட்டில் மிக முக்கியமாகக் கருதுகின்றனர்.

9. நரசிம்மர் திருவுருவ பேதங்கள்

நரசிம்மர் பற்றியுள்ள பல இலக்கியங்களில் நரசிம்மரின் உருவ எண்ணிக்கை மிக அதிகமாக 74 ஆகவும்; அடுத்து 23 ஆகவும் கருதப்பட்டாலும், நவ (9) நரசிம்மர் என்ற எண்ணமே பரலவாக உள்ளது. அவை :

Koviloor Digital Library

1. அஹோபில நரசிம்மர்
2. சத்ரவட நரசிம்மர்
3. யோகாநந்த நரசிம்மர்
4. காராஞ்ச நரசிம்மர்
5. பார்க்கவ நரசிம்மர்
6. வராக நரசிம்மர்
7. ஜ்வாலா நரசிம்மர்
8. பானக நரசிம்மர்
9. மாலோல நரசிம்மர்

சிங்க முகமும், மனித உடலுமுள்ள நரசிம்மருக்குப் பொதுவாக இருப்பது ஒரு தலை, நான்கு கைகளே.

எனினும் சில தலங்களில் நரசிம்மர் 5 முகமும், 8,10,16,18,26,32,64 கரங்களும் உடையவராகவும்; லக்ஷ்மியுடன் அல்லது ஸ்ரீ தேவி பூதேவியோடு சேர்ந்திருப்பராகவும்; அமர்ந்து, நின்று நகருபவராகவும்; வராகமும் சிம்மமும் சேர்ந்த வடிவிலும் மாறுபட்ட இன்னும் பல உருவங்களோடும் பல் ஆயுதங்களோடும் காணப்படுகிறார்.

10. நரசிம்மரைப் பற்றிய முக்கிய நூல்கள்

1) பாகவதம்
2) ஹரிவம்சம்
3) விஷ்ணுபுராணம்
4) விஹகேந்திரஸம்ஹிதை
5) பத்ம ஸம்ஹிதை
6) ஈசுவர ஸம்ஹிதை
7) பராசர ஸம்ஹிதை
8) ஸாத்வத ஸம்ஹிதை
9) சேஷ ஸம்ஹிதை
10) வைகானச ஆகமம்
11) விஷ்ணு ஸம்ஹிதை
12) ஸ்ரீ ப்ரஸன்ன ஸம்ஹிதை
13) விஷ்ணு தந்திரம்
14) விஷ்வக்சேன ஸம்ஹிதை
15) ஹயசீர்ஷ ஸம்ஹிதை
16) பரமேசுவர ஸம்ஹிதை
17) மத்ஸ்ய புராணம்
18) சில்ப ரத்தினம்
19) ப்ரபஞ்ச சார ஸங்கிரஹம்
20) நரசிம்ம புராணம்

11. லக்ஷ்மி நரசிம்ம துதிகள்

எல்லா ஆபத்துக்களையும் நீக்கி, ஸகல நலனும்
தருகின்ற ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர் அருளிய
ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ கராவலம்பந ஸ்தோத்ரம்.

ஸ்ரீ மத் பயோநிதி நிகேதந சக்ரபாணே
போகீந்தர போகமணிரஞ்ஜித புண்யமூர்த்தே
யோகீச சாஸ்வத சரண்ய பவாப்தி போத
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (1)

ப்ரஹ்மேந்த்ர ருத்ர மருதர்க்க கிரீடகோடி
ஸங்கட்டிதாங்க்ரி கமலாமல காந்திகாந்த
லக்ஷ்மீ லஸத்குச ஸரோருஹ ராஜஹம்ஸ
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (2)

ஸம்ஸார தாவ தஹநாதுர பீகரோரு
ஜ்வாலா வலீபி ரதிதக்த தநூருஹஸ்ய
த்வத்பாத பத்மஸரஸீ சரணாகதஸ்ய
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (3)

ஸம்ஸார ஜாலபதிதஸ்ய ஜகந்நிவாஸ
ஸர்வேந்த்ரியார்த்த படிஷாஸ ஜஷோபமஸ்ய
ப்ரோத்கண்டித ப்ரசுர தாலுக மஸ்தகஸ்ய
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (4)

ஸம்ஸாரகூப மதிகோர மகாத மூலம்
ஸம்ப்ராப்ய துக்க சதஸர்ப்ப ஸமாகுலஸ்ய
தீநஸ்ய தேவ க்ருபணாபத மாகதஸ்ய
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (5)

ஸம்ஸார பீகர கரீச காரபிகாத-
Koviloor Digital Library
நிஷ்பிஷ்ட மர்ம வபுஷஸ் ஸகலார்த்திநாச
ப்ராண ப்ரயாண பவபீதி ஸமாகுலஸ்ய
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (6)

ஸம்ஸார ஸர்ப்ப கநவக்த்ர பயோக்ர தீவ்ர
தம்ஷ்ட்ரா கராள விஷதக்த விநஷ்ட மூர்த்தே
நாகாரி வாஹந ஸுதாப்தி நிவாஸ சௌரே
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (7)

ஸம்ஸார வ்ருக்ஷ மகபீஜ மநந்தகர்ம
சாகா சதம் கரணபத்ர மநங்க புஷ்பம்
ஆருஹ்ய துக்க பலிதம் பததோ தயாளோ
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (8)

ஸம்ஸார ஸாகர விசால கரால கால
நக்ர க்ரஹ க்ரஸந நிக்ரஹ விக்ரஹஸ்ய
வ்யாக்ரஸ்ய ராக ரஸநோர்மி நிபீடிதஸ்ய
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (9)

ஸம்ஸார ஸாகர நிமஜ்ஜந முஹ்யமாநம்
தீநம் விலோகய விபோ கருணாநிதே மாம்
ப்ரஹ்லாத கேத பரிஹார பராவதார
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (10)

ஸம்ஸாரகோர கஹ்நே சரதோ முராரே
மாரோக்ர பீகர ம்ருக ப்ரவரார்திதஸ்ய
ஆர்த்தஸ்ய மத்ஸர நிதாக நிபீடிதஸ்ய
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (11)

Koviloor Digital Library
11157

பத்வா களே யமபடா பஹு தர்ஜயந்த :
கர்ஷந்தி யத்ர பவபாச சதைர் யுதம்ச மாம்
ஏகாகிநம் பரவசம் சகிதம் தயாளோ
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (12)

லக்ஷ்மீபதே கமலநாப ஸுரேச விஷ்ணோ
வைகுண்ட க்ருஷ்ண மதுஸூதந புஷ்கராக்ஷ
ப்ராஹ்மண்ய கேச வஜநார்தந வாஸு தேவ
தேவேச தேஹி க்ருபணஸ்ய கராவலம்பம் (13)

ஏகேந சக்ர மபரேண கரேண சங்கம்
அந்யேந ஸிந்து தநயா மவலம்ப்ய திஷ்டந்
வாமேதரேண வரதாபய பத்ம சிஹ்ந
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (14)

அந்தஸ்ய மே ஹ்ருத விவேக மஹாதநஸ்ய
சோரை: ப்ரபோ பலிபி ரிந்த்ரிய நாமதேயை:
மோஹாந்த கூப குஹரே விநிபாதிதஸ்ய
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (15)

ப்ரஹ்லாத நாரத பராசர புண்டரீக
வ்யாஸாதி பாகவத புங்கவ ஹ்ருந்நிவாஸ
பக்தாநுரக்த பரிபாலந பாரிஜாத
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (16)

லக்ஷ்மி ந்ருஸிம்ஹ சரணாப்ஜ மதுவ்ரதேந
ஸ்தோத்ரம் க்ருதம் சுபகரம் புவி சங்கரேண
யே தத் படந்தி மநுஜா ஹரிபக்தி யுக்தா:
தே யாந்தி தத்பத ஸரோஜ மகண்ட ரூபம் (17)

கொவிலூர்

Koviloor Digital Library

வஜ்ர நகாய வித்மஹே, தீக்ஷ்ண தம்ஷ்ட்ராய தீமஹி
தன்னோ நாரசிம்ம ப்ரசோதயாத். – நரசிம்ம காயத்ரி

நரசிம்ம புராணத்திலுள்ள தொல்லை நீக்கும்

ருணவிமோசன ந்ருசிம்ம ஸ்தோத்திரம்

தேவதாகார்ய ஸித்யர்த்தம் ஸபாஸ்தம்ப ஸமுத்பவம்
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீர்ம் நமாமி ருணமுக்தயே

லக்ஷ்ம்யாலிங்கித வாமாங்கம் பக்தாநாம் வரதாயகம்
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே

ஆந்த்ரமாலாதரம் சங்க சக்ராப்ஜாயுத தாரிணம்
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே

ஸ்மரணாத் ஸர்வ பாபக்நம் கத்ருஜ் விஷநாசனம்
ஸ்ரீ ந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே

ஸிம்ஹநாதேந மஹதா திக்தந்தி பயநாசநம்
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே

ப்ரஹலாத வரதம் ஸ்ரீசம் தைத்யேஸ்வர விதாரிணம்
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே

க்ரூரக்ரஹை: பீடிதாநாம் பக்தாநா மபயப்ரதம்
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே

வேதவேதாந்த யஞ்ஞேசம் ப்ரஹ்மருத்ராதி வந்திதம்
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே

ய இதம் பட்யதே நித்யம் ருணமோசந ஸம்ஞிதம்
அந்ருணீ ஜாயதே ஸத்யோ தநம் சீக்ரமவாப்நுயாத்

Koviloor Digital Library

நரசிம்ம சகஸ்ர நாமத்தில் ஒரு பகுதி

நமோஸ்து நாராயண நாரஸிம்ஹ
நமோஸ்து நாராயண வீரஸிம்ஹ
நமோஸ்து நாராயண க்ரூரஸிம்ஹ
நமோஸ்து நாராயண திவ்யஸிம்ஹ

நமோஸ்து நாராயண வ்யாக்ரஸிம்ஹ
நமோஸ்து நாராயண புச்சஸிம்ஹ
நமோஸ்து நாராயண பூர்ணஸிம்ஹ
நமோஸ்து நாராயண ரௌத்ரஸிம்ஹ

நமோ நமோ பீஷண பத்ரஸிம்ஹ
நமோ நமோ விஹ்வல நேத்ரஸிம்ஹ
நமோ நமோ ப்ரும்ஹித பூதஸிம்ஹ
நமோ நமோ நிர்மல சித்ரஸிம்ஹ

நமோ நமோ நிர்ஜித காலஸ்ம்ஹ
நமோ நம: கல்பித கல்பஸிம்ஹ
நமோ நம் : காமத காமஸிம்ஹ
நமோ நமஸ்தே புவநைக ஸிம்ஹ

12. கம்பப் பெருமாள்கள்

கலைகளுக்கு அதிபதியான சரஸ்வதி (பேச்சு + அம்மன்) பேச்சியம்மன் ஆகவும்; ஓம் காளீஸ்வரி அங்காளேஸ்வரி ஆகவும்; பிரும்மன் விரும்பன் ஆகவும் மாறியது போலவே ஸ்தம்பம் (தூண்) கம்பம் ஆகி, கம்பத்திலிருந்து வெளிப்பட்ட விஷ்ணு கம்பப் பெருமாள் ஆகிவிட்டார். தென் தமிழநாட்டில், குறிப்பாக மதுரைக்குத் தெற்கே கம்பப்பெருமாள் கோயில்கள் அதிகமாகவுள்ளன. கர்நாடகத்தில்நரசிம்மரை கம்படய்யா என்பது குறிப்பிடத்தக்கது

Koviloor Digital Library

13. நவகிரஹமும் நரசிம்மரும்

மதுரைக் கூடலழகர் கோயில் போன்ற மிகத் தொன்மையான சில திருமால் ஆலயங்களில் கூட நவக்ரஹ சன்னதியிருந்தாலும், பொதுவாக, பெருமாள் கோயில்களில் நவக்ரஹ சன்னதி மிகக் குறைவே.

சைவ மரபில், குரு கிரகத்தை வணங்கிட தக்ஷிணாமூர்த்தியை வழிபடுவது போல, வைஷ்ணவ மரபிலும், நவக்கிரங்களில் ஒவ்வொருவரையும், வழிபட விஷ்ணுவின் ஒரு அவதார மூர்த்தியை வழிபடுவது வழக்கமாக உள்ளது. இதுவே, விஷ்ணு ஆலயங்களில் நவக்கிர சன்னதி அதிகமின்மைக்கு காரணம்.

கிரகங்களை வழிபட்ட பலனை அளிப்பதாகக் கருதப்படும் முக்கிய விஷ்ணு அவதாரங்கள்.

மத்ஸ்ய அவதாரம்	– கேது	கல்கி அவதாரம்	– புதன்
வராக "	– ராகு	நரசிம்மர் "	– செவ்வாய்
கூர்ம "	– சனி	கிருஷ்ண "	– சந்திரன்
பரசுராம "	– சுக்ரன்	ராம "	– சூரியன்
வாமன "	– குரு	பலராமர் "	– குளிகன்

நரசிம்மர், செவ்வாய் கிரக தாக்கத்தை, நமக்கு நன்மை பயப்பதாக மாற்றுவதால், செவ்வாய் கிரகத்தை வழிபட வேண்டியவர்கள் நரசிம்மரை, குறிப்பாக, செவ்வாய்க் கிழமைகளிலும், அன்றாடம், செவ்வாய் ஹோரையிலும் வணங்குவது சிறப்பாக கருதப்படுகிறது.

அன்றாடம் பகலில் செவ்வாய் ஹோரை நேரம்

செவ்வாய் 6–7 ; 1–2 புதன் 10–11; 5–6 *வியாழன்7–8; 2–3*
வெள்ளி 11–12; சனி 8–9; 3–4 ; ஞாயிறு1–2 ; திங்கள் 9–10; 4–5

Koviloor Digital Library

14. நரசிம்மர் அஷ்டோத்தர சத (108) நாமங்கள்

ஓம் நரசிங்கப் பெருமானே போற்றி

ஓம் நாடியருள் தெய்வமே போற்றி

ஓம் அரசு அருள்வோனே போற்றி

ஓம் அறக் காவலனே போற்றி

ஓம் அகவத்த நரசிம்மனே போற்றி

ஓம் அக்ஷயதிருதியை நாதனே போற்றி

ஓம் அழகிய சிம்மனே போற்றி

ஓம் அம்ருத நரசிம்மனே போற்றி

ஓம் அருள் அபயகரனே போற்றி

ஓம் அகோபில நரசிம்மனே போற்றி

ஓம் அரவப் புரியோனே போற்றி

ஓம் அஞ்ஞான நாசகனே போற்றி

ஓம் அகோர ரூபனே போற்றி

ஓம் ஆகாச நரசிம்மனே போற்றி

ஓம் அட்டகாச நரசிம்மனே போற்றி

ஓம் ஆவேச நரசிம்மனே போற்றி

ஓம் இரண்யாக்ஷ வதனே போற்றி

ஓம் இரண்யகசிபு நிக்ரஹனேபோற்றி

ஓம் ஈரெண் கரனே போற்றி

ஓம் இருந்தும் அருள்வோனேபோற்றி

ஓம் உக்ர நரசிம்மனே போற்றி

ஓம் உடனே காப்பவனே போற்றி

ஓம் ஏற்றுவோர்க் கெளியனேபோற்றி

ஓம் எழுபத்து நான்கு வடிவனேபோற்றி

ஓம் கதிர் நரசிம்மனே போற்றி

ஓம் கதலி நரசிம்மனே போற்றி

ஓம் கர்ஜிப்பவனே போற்றி

ஓம் கம்பப் பெருமானே போற்றி

ஓம் கல்யாண நரசிம்மனே போற்றி

ஓம் கருடாத்ரி நாதனே போற்றி

ஓம் கனககிரி நாதனே போற்றி

ஓம் காராஞ்ச நரசிம்மனே போற்றி

ஓம் கிரஹண நரசிம்மனே போற்றி

ஓம் கிரிஜா நரசிம்மனே போற்றி

ஓம் க்ரோத நரசிம்மனே போற்றி

ஓம் குகாந்தர நரசிம்மனே போற்றி

Koviloor Digital Library

ஓம் கும்பி நரசிம்மனே போற்றி
ஓம் கோல நரசிம்மனே போற்றி
ஓம் கோஷ்டியூர் நரசிம்மனே போற்றி
ஓம் கோர நரசிம்மனே போற்றி
ஓம் சந்தனப் பிரியனே போற்றி
ஓம் சர்வாபரணனே போற்றி
ஓம் சக்ர நரசிம்மனே போற்றி
ஓம் சத்ர நரசிம்மனே போற்றி
ஓம் சண்ட நரசிம்மனே போற்றி
ஓம் சம்ஹார நரசிம்மனே போற்றி
ஓம் சத்ரவட நரசிம்மனே போற்றி
ஓம் சரபத்தால் குளிர்ந்தவனே போற்றி
ஓம் ஷட்கோணத் துறைபவனே போற்றி
ஓம் சாந்த நரசிம்மனே போற்றி
ஓம் சிம்மாசனனே போற்றி
ஓம் சிம்மாசலனே போற்றி
ஓம் சுடர் விழியனே போற்றி
ஓம் சுந்தர சிம்மனே போற்றி
ஓம் சுதர்சன நரசிம்மனே போற்றி
ஓம் சுவதந்திர நரசிம்மனே போற்றி
ஓம் செவ்வாடையனே போற்றி
ஓம் செஞ்சந்தனப் பிரியனே போற்றி
ஓம் செளம்ய நரசிம்மனே போற்றி
ஓம் ஸ்தௌண நரசிம்மனே போற்றி
ஓம் ஜ்வலன நரசிம்மனே போற்றி
ஓம் ஜ்வாலா நரசிம்மனே போற்றி
ஓம் நவ நரசிம்மனே போற்றி
ஓம் நவவ்யூக நரசிம்மனே போற்றி
ஓம் நிருத்ய நரசிம்மனே போற்றி
ஓம் நின்றும் அருள்வோனே போற்றி
ஓம் பிரசன்ன நரசிம்மனே போற்றி
ஓம் பிரசாத நரசிம்மனே போற்றி
ஓம் பிரஹ்லாத நரசிம்மனே போற்றி
ஓம் பிரஹ்லாத வரத நரசிம்மனே போற்றி
ஓம் பக்த ரக்ஷகனே போற்றி
ஓம் பகையழித்தவனே போற்றி

Koviloor Digital Library

ஓம் பஞ்ச முகனே போற்றி
ஓம் பத்மாசனனே போற்றி
ஓம் பஞ்ச நரசிம்மனே போற்றி
ஓம் பரத்வாஜர்க்கருளியவனே போற்றி
ஓம் பாவக நரசிம்மனே போற்றி
ஓம் பானக நரசிம்மனே போற்றி
ஓம் பார்க்கவ நரசிம்மனே போற்றி
ஓம் பாடலாத்ரி நரசிம்மனே போற்றி
ஓம் பிருத்வி நரசிம்மனே போற்றி
ஓம் பிரம்மனுக்கருளியவனே போற்றி
ஓம் புஷ்டி நரசிம்மனே போற்றி
ஓம் புராண நாயகனே போற்றி
ஓம் புச்ச நரசிம்மனே போற்றி
ஓம் பூவராக நரசிம்மனே போற்றி
ஓம் மால் அவதாரமே போற்றி
ஓம் மாலோல நரசிம்மனே போற்றி
ஓம் முக்கண்ணனே போற்றி
ஓம் மலையன்ன தேகனே போற்றி
ஓம் முக்கிய அவதாரனே போற்றி
ஓம் முப்பத்திரு க்ஷேத்ரனே போற்றி
ஓம் யோக நரசிம்மனே போற்றி
ஓம் யோகானந்த நரசிம்மனேபோற்றி
ஓம் ருத்ர நரசிம்மனே போற்றி
ஓம் ருண விமோசனனே போற்றி
ஓம் லக்ஷ்மி நரசிம்மனே போற்றி
ஓம் லோக ரக்ஷகனே போற்றி
ஓம் வஜ்ர தேகனே போற்றி
ஓம் வராக நரசிம்மனே போற்றி
ஓம் வரப்ரத மூர்த்தியே போற்றி
ஓம் வரதயோக நரசிம்மனே போற்றி
ஓம் விலம்ப நரசிம்மனே போற்றி
ஓம் வியாக்ர நர்சிம்மனே போற்றி
ஓம் விசுவரூபனே போற்றி
ஓம் வீரவிக்ரம நரசிம்மனே போற்றி
ஓம் விஷ்ணுஸ்வரூபனே போற்றி
ஓம் வெற்றியருள் சிம்மனே போற்றி

Koviloor Digital Library

15. யோக நர்சிம்மரின் சிறப்பு

குழந்தையை சீர்திருத்திட சீற்றம் கொள்ளும் தாய் ஒரே நொடியில், கோபம் தணிந்து, குழந்தையைக் கொஞ்சிப் பராமரிக்கிறாள். இது போலவே தான், இரண்யனைத் திருத்த, உக்ரவடிவமாக வந்த நரசிம்மரும் சீக்கிரமே யோகத்தில், அமைதியில் ஆழ்ந்து விடுகிறார்.

விஷ்ணுவை போகமூர்த்தி என்றே பரவலாக கருதினாலும், அவர் தக்ஷிணாமூர்த்தி போல தன்னுள்ளேயே நிறைவு காணும் ஞானமூர்த்தியாக, தரிசிப்போர் ஞானநிலை அடைய உதாரணமாக இருப்பதே யோக நரசிம்ம ரூபம் ஆகும்.

16. ஆனைமலை கிரிவல வழிபாடு

திருவண்ணாமலை போல, தமிழகத்தில், நெடுங் காலமாக, கிரிவலம் செய்யப்படும் தலங்களுள் மதுரை மாவட்ட ஆனைமலையும் ஒன்று. இதை ஒட்டி உள்ள கொடிக்குளம், வௌவால் தோட்டம், ஒத்தக்கடை , நரசிங்கம், அரும்பனூர்–புதூர் ஆகிய ஊர்களிலிருந்து பக்தர்கள் பௌர்ணமி தோறும் ஆனைமலையை கிரிவலம் வருகின்றனர்.

எல்லோரும் ஒரே இடத்திலிருந்து திருச்சுற்றை தொடங்கி முடிப்பதில்லை. தத்தம் ஊரிலிருந்தே புறப்பட்டு திரும்புகின்றனர். சுமார் 12 கி.மீ. திருச்சுற்றை, அதிகாலை 3 மணிக்குத் துவங்கி ஆரோக்கியமும், அமைதியும் அருளும் பெற்று விடியும் போது வீடு திரும்பி, அன்றாடப் பணியில் ஈடுபடுகின்றனர்.

விநாயகர், முருகன், சிவபெருமான், அம்மன், பெருமாள், கிராம தேவதைகள் உட்பட பரம்பொருளின் பல்வித அவதார ரூபங்களையும் தரிசித்த பயனை ஒருசேர அளிக்கின்ற ஆனைமலை கிரிவல வழிபாட்டை யாவரும் செய்திட இறையருள் கூட்டும். - அவனருள்

Koviloor Digital Library

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 11157
இலவ

Koviloor Digital Library

ஸ்ரீ முக்தீசுவரர் அருளாலும் காஞ்சி பரமாச்சாரியார் ஆசியாலும் உருவான

அவனருள் வெளியீடுகள்

1. இறை வழிபாடு-1 2. இறை வழிபாடு-2
3. சிவராத்ரி பிரதோஷ பெருமையும் அபிஷேகப் பயனும்; 4. வைணவத் திருத்தலங்கள்
5. சதுரகிரி மகாலிங்கம் வரலாறும் சித்தர் குறிப்பும் ; 6, 21, 55. ஸ்ரீமுக்தீஸ்வரர் வரலாறு 0.25
7. இறைவழிபாடு-3 ; 8, 16. உருவ வழிபாடும் ஆலயங்களும் 0.40 ; 9, 13, 22 கந்த சஷ்டி கவசங்கள், ரூ. 0.50
10. சிவபுராணம் ; 11,41. ஆலயத்திற்கு என்ன கொண்டு செல்வது? ஏன்? ரூ. 1.00
12,19. விநாயகர் காரியசித்தி மாலை; 14. சிவத்தலங்கள் (தேவாரம் கிடைத்தவை) 1.00
15,32,45,58. சிவாலய அர்ச்சனை அஷ்டோத்தரங்கள் 1.00 ; 17,59. நவக்ரஹ வழிபாடும் தலங்களும் 0.50
18. ஆறுமுகன் அருட்தலங்கள்-1666. ரூ. 5.00 ; 20,28,37,63. தினசரி திருவிளக்கு வழிபாடு 0.25
23. ஸ்ரீ ஞானாதீசுவரர் வரலாறு ; 24. வெற்றிக் கடவுள் விநாயகர் வழிபாடும் தலங்களும்
25,52. விரதங்களும் பண்டிகைகளும் 1.00 ; 26. ஆஞ்சனேயர் வழிபாடு
27. தமிழகத்துள்ள ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்கள் 1.25 ; 29, 43. திருவாதவூர்த் தலவரலாறு
30. அன்றாடம் அனைத்து சிவாலய வழிபாடு 1.00 ; 31. மாரியம்மன் அஷ்டோத்தரம்
33. காளியம்மன் அஷ்டோத்திரம் ; 34. விஷ்ணு ஆலய அஷ்டோத்திரங்கள் 0.75
35. அன்றாடம் அனைத்து திருமால் தரிசனம் 0.75 ; 36. ருத்ராக்ஷ மகிமை 0.25
38. அன்றாட ஆலய வழிபாடும் ஆலய ஆத்திச்சூடியும் 0.75 ; 39. நடராஜர் அஷ்டோத்திர சதநாமாவளி
40,71. பிரதோஷம் – பெருமையும், வழிபாடும் 1.00 ; 42 திருநீறு (விபூதி) பெருமையும், பயனும் 0.25
44. கடவுளும் கோயிலும் – சில கேள்விகள் 1.50 ; 46. விநாயகர் வழிபாடு (தமிழ் சகஸ்ரநாமத்துடன்) 0.75
47. ஆலயம் எழுப்புதல் – ஒரு வழிகாட்டி 1.00 ; 48. திருக்காட்டுப்பள்ளி தல வரலாறு
49, 62. முருகன் பாதயாத்திரை பஜனை; 50. ஆதிசங்கரர் பெருமையும் காலமும் 1.00
51. தேவார வைப்புத் தலங்கள் 1.50 ; 53. மதுரைத் திருவிளையாடல்களும் தலங்களும் 1.00
54. தமிழகத் திருக்கோயில்கள் – சில செய்திகள் 1.00 ; 56. இந்திய நோக்கில் மனிதனும் படைப்பும் 1.00
57. பெண்கள் காத்து வரும் பாரதப் பண்பாடு 0.50
61. பௌர்ணமி வழிபாடும் தமிழகத்திலுள்ள அருணாசலேசர் ஆலயங்களும் 0.75
64. காஞ்சியில் அருளும் கணக்கிலா லிங்கங்களும் தமிழகத்து ஏகாம்பரேஸ்வரர் கோயில்களும் 1.00
65. தஞ்சை மாவட்டத்துள்ள சில ஸப்தஸ்தான தலங்கள் 1.00
67. திருத்தலங்கள் அறிமுகமும் 108 வைணவ திவ்ய தேசங்களும் 1.50
68. கொந்தகை திருத்தலப் பெருமை 108 திவ்யதேச அஷ்டோத்திரங்கள்
69. கவசங்கள்–ஒரு அறிமுகமும் சில தெய்வ கவசங்களும் 1.25; 70. அன்றாட அனைத்து அம்மன் தரிசனம் 1.50
72. சூரிய பூஜையின் சிறப்பும் அவசியமும் ; 74. யோக ஆசனம் – ஒரு அறிமுகம் 1.00
75 EXSEL TO EXCEL (ஜயவளர்வு அரிச்சுவடி); 76. YOU ARE ALSO CAPABLE (நீங்களும் திறனுடையவரே)
77. ஏகாதசி விரதம் பெருமையும், அவசியமும் 1.00 78. நரசிம்மர் வழிபாடும் தலங்களும்

அவனருள் பேரா. எஸ். ரமணி, 168, SHS காலனி, மதுரை – 625 009.
(விலை குறிப்பிடாத நூல்கள் இலவசம் பதிப்பு உரிமை அவனருளுக்கே)